இன்று வெளிவந்த பிளஸ்-டூ பொதுத்தேர்வில் சென்னை கொளத்தூர் எவர்வின் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளி 100 சதவீதம் தேர்ச்சி பெற்று சாதனை படைத்துள்ளது. இப்பள்ளியில் தேர்வு எழுதிய 352 மாணவர்களும் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

சீத்தல் ருடானி மற்றும் சந்தியா ஆகிய இரண்டு மாணவர்கள் 1200-க்கு 1181 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். இவர்கள் இருவரும் இரண்டு பாடங்களில் 200-க்கு 200 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். ராஜ்குமார் 1180 மதிப்பெண் பெற்று இரண்டாம் இடம் பெற்றார். இவர் மூன்று பாடங்களில் 200-க்கு 200 மதிப்பெண்கள் பெற்றுள்ளாார்.

முகமது அன்சர், சாயிஷா நாயர், இலக்கிய நந்தினி ஆகிய மூன்று பேர் 1178 மதிப்பெண்கள் பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளனர். இதில் முகமது அன்சர் 4 பாடங்களில் 200-க்கு 200 மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்துள்ளார்.

“எங்கள் பள்ளியில் 11-ஆம் வகுப்பு பாடம் முழுவதும் கற்பிக்கப்பட்டது. அதே போல் 11-ஆம் வகுப்பில் ஒரு மாணவரைக் கூட பெயிலாக்காமல் இந்த 100 சதவீத தேர்ச்சியைப் பெற்றுள்ளோம்” என எவர்வின் பள்ளிகள் குழுமத்தின் சி.இ.ஓ மகேஸ்வரி தெரிவித்தார்.

பள்ளியின் சீனியர் முதல்வர் புருஷோத்தமன், முதல்வர் கலையரசி, இயக்குநர் வித்யா மற்றும் துணைமுதல்வர் கலைவாணி ஆகியோரும் சாதனை படைத்த மாணவர்களுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

மொத்தம் 40 மாணவர்கள் வெவ்வேறு பாடங்களில் 200-க்கு 200 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர்.